DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024
Prosecution Witness - P.W. 4

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. விஜயன் |
| Father's Name | : | தங்கையன் |
| Village | : | மலையடி |
| Taluk | : | விளவங்கோடு |
| Calling | : | கூலி |
| Age | : | 49 |
| Date | : | 16.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

16.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பரக்குன்று கடையாறவிளையில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போன ஜேம்ஸ் எனது அண்ணன். இதற்கு முன்னர் சாட்சி சொன்ன ஜெயராணி எனது அண்ணன் ஜேம்ஸ் ன் மனைவி. இரண்டாவது சாட்சி ஜெகன் ஜேம்ஸ் எனது அண்ணனின் மூத்த மகன். எனது அண்ணன் என்ன வேலை செய்தார் என்றால் மார்த்தாண்டம் சந்தையில் துப்புரவு வேலை செய்தார்.

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எனது வீடு இறந்து போன ஜேம்ஸ் வீட்டிலிருந்து ஒரு வீடு தள்ளி கிழக்கு திசையில் உள்ளது. 20 அடி தொலைவு இருக்கும். எனது வீட்டிற்கும், ஜேம்ஸ் வீட்டிற்கும் இடையே உள்ளது எனது தம்பி அருள்வினுவின் வீடு உள்ளது. 26.11.2023 அன்று காலை 10.45 மணிக்கு நான் வீட்டில் பேப்பர் படித்து கொண்டிருந்தேன். எனது அண்ணியின் அலறல் சத்தமும், அண்ணின் பையன் ஜெகன் ஜேம்ஸ் ன் சத்தமும் கேட்டது. வீட்டிலிருந்து வெளியே ஓடி வந்து அவர்கள் வீட்டிற்குள் போவதற்காக வெளி கேட் அருகில் நான் வரும்போது என்னை கிராஸ் செய்து மேற்கே மெயின் ரோட்டை பார்த்து ஆஜர் எதிரி உடம்பெல்லாம் இரத்தக் கறையுடன் ஓடினான். அவர் இடுப்பின் பின்புறம் பிளாஸ்டிக் கவரில் பணம், நகைகள் மற்றும் பிளாஸ்டிக் கயிறு ஆகியவற்றை வைத்து அந்த பிளாஸ்டிக் கவரை சொருகியிருந்தார். நான் வீட்டிற்குள் ஓடி போய் பார்க்கும்போது எனது அண்ணன் உணர்ச்சியற்று கிடந்தார். நான் பார்க்கும்போது அவர் பொதுவாக அணிந்திருக்கும் நகைகள் எதுவும் இல்லை. லுங்கி மட்டும் அணிந்திருந்தார். முகம் எல்லாம் இரத்தம் இருந்தது. டிவி, செயர், டேபிள், சுத்தியல், இரும்பு பைப், கோட்டர் பாட்டில், சிகரெட் லைட்டர், டிவி ரிமோட், அண்ணனின் வெள்ளை முண்டு, லுங்கி ஒன்று ஆகியவை கிடந்தன. நானும் ஜெகன் ஜேம்ஸூம் வெளியில் இறங்கி ஆட்டோ பிடிக்க வந்தோம். அதற்குள் சத்தம் கேட்டு அருள்ஜோஸ் அங்கு வந்தார். அவருடைய ஆட்டோவை எடுத்து வரச் சொன்னோம். ஆட்டோவை மெயின் ரோட்டிற்கு கொண்டு வந்தார். நானும், ஜெகன் ஜேம்ஸ், அண்ணனை ஏற்றி கொண்டு ஆட்டோவில் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். டாக்டரிடம் கொண்டு போனோம்.

டாக்டர் பரிசோதனை செய்துவிட்டு, அண்ணன் இறந்து விட்டதாக சொன்னார். அதன்பிறகு அண்ணனின் உடலை பிணவறைக்கு கொண்டு சென்றார்கள். நாங்கள் மருத்துவமனைக்கு சென்றபிறகு கொஞ்சம் கழித்து அண்ணனின் மனைவி ஜெயராணியும், எனது அக்காளின் மகன் டெமியும் ஒரு பைக்கில் மருத்துவமனைக்கு வந்தார்கள். என் அண்ணி உதவி ஆய்வாளரிடம் ஒரு புகார் ஒன்று கொடுத்தார். நான் பார்த்த நகைகளை என்னால் அடையாளம் காட்ட முடியும். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள ஜெயின் மற்றும் மோதிரங்கள் தான் எதிரி சொருகியிருந்த வெள்ளை கவரில் இருந்தது. அதில் இரண்டு மோதிரங்களில் குஞ்ஞி என எழுதியிருந்தது. எதிரி இரண்டு அடி தூரத்தில் தான் என்னை கிராஸ் செய்தார். அவர் வைத்திருந்த கவரில் இருந்த நகைகளை நான் நன்றாக பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் கயிறுதான் கவரில் இருந்த கயிறு. போலீசார் என்னை குழித்துறை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை.

<u>**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**</u>

நான் சத்தம் கேட்டு ஓடிவந்து, கேட்டின் உள்ளே போகும்போது எதிரி அந்த கேட்டின் வழியே வெளியே போனாரா என்றால் ஆமாம். நான் சம்பவத்தன்று வீட்டில் தான் இருந்தேனா என்றால் ஆமாம். எனது அண்ணியும், எது அண்ணனின் மகன் ஜெகன் ஜேம்ஸூம் சத்தம் போட்டதை தவிர அதற்கு முன்பு நான் வேறு எந்த சத்தத்தையும் கேட்கவில்லையா என்றால் இல்லை. நான் பரக்குன்று சர்ச்சின் உறுப்பினர் என்றால் சரிதான். சர்ச்சில் சாதாரணமாக காலை 6.30 மணிக்கு திருப்பலி

நடக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் 9.30 மணிக்கு திருப்பலி ஆரம்பித்தது. எனக்கு சர்ச்சிற்கு போகும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. எனது தந்தையின் பெயர் தங்கைய்யன். எனது அம்மாவின் பெயர்தான் குஞ்ஞி என்றால் ஆமாம். நான் அடையாளம் காட்டிய மோதிரங்கள் எனது அம்மா மற்றும் அப்பாவின் மோதிரங்கள் என்றால் சரியல்ல. அது எனது அண்ணனின் மோதிரம்தான் அவருடைய வண்டியிலும் குஞ்ஞி என்றுதான் எழுதியிருப்பார். மூன்று மோதிரங்களும் வெவ்வேறு அளவுகள் கொண்டது என்றால் ஆமாம். இரண்டு மோதிரங்கள் இடது கையில் மூன்றாவது விரலிலும், நான்காவது விரலிலும் போடும் மோதிரங்கள். ஒரு மோதிரம் வலது கையில் ஆள்காட்டி விரலில் போடும் மோதிரம். அதனால் வெவ்வேறு அளவுகளில் உள்ளது. அந்த மோதிரங்களை அவர் எப்போதும் போட்டிருப்பாரா என்றால் போட்டிருப்பார். வேலைக்கு செல்லும்போது போக மாட்டார். அவர் வீட்டிலேதான் இருந்தார், அதனால் போட்டிருந்தார். எத்தனை மாதமாக அவர் வீட்டில் இருந்தார் என்றால் 1 ½ மாதமாக இருந்தார். அந்த 1 ½ மாதமும் கைகளில் மோதிரங்கள் போட்டிருந்தாரா என்றால் போட்டிருந்தார். நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 11.15 மணியளவில் சென்றோம். அங்கே கொண்டு போன உடனேயே டாக்டர் பார்த்துவிட்டாரா என்றால் பார்த்துவிட்டார். உடனேயே இறந்துவிட்டார் என்று சொன்னாரா என்றால் ஆமாம். உடனேயே பிணவறைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்களா என்றால் 10, 15 நிமிடங்கள் கழித்து எடுத்துச் சென்றார்கள். யார் எடுத்துச் சென்றார்கள் என்றால் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்தவர்கள் எடுத்துச் சென்றார்கள். நான் உடன் சென்றேன். நான்

எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் 4 மணிக்கு வந்தேன். வீட்டிற்கு வரும்போது அங்கே ஊர்க்காரர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது, நான் எண்ணவில்லை. நான் பைக்கில் போய் இறங்கி அண்ணன் வீட்டிற்கு சென்றுவிட்டேன். நான் போகும்போது வீட்டில் யார் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் உறவினர்கள், ஊர்க்காரர்கள் இருந்தார்கள். அப்போது வீடு பூட்டுப்போட்டிருந்தது. என் அண்ணி மற்றும் அந்த நபர்கள் எல்லாம் வீட்டிற்கு வெளியேதான் இருந்தார்கள். நான் வீட்டிற்குள் சென்றவுடன் எனது அண்ணனை பார்த்தேனா அல்லது சுற்றியும் என்ன உள்ளது என்று பார்த்தேனா என்றால் அண்ணனைதான் பார்த்தேன், அதன்பிறகு சுற்றி பார்த்தபோது நான் தற்போது சொன்ன பொருட்களை எல்லாம் பார்த்தேன். நாங்கள் வீட்டில் இருந்த எனது அண்ணனை தூக்கி வெளியே கொண்டு வரும் வரையில் எங்கள் மூவரை தவிர வேறு யாரும் பார்க்கவில்லையா என்றால் பார்க்கவில்லை. அவ்வாறு என்னை கிராஸ் செய்து ஒரு நபர் ஓடுவதை பார்த்தவுடன் அவரை பிடிப்பதற்கோ, என்ன ஏதேன்று பார்ப்பதற்கோ முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். அதற்குள் வீட்டிற்குள் இருந்து அலறல் சத்தம் கேட்டது. எனது அண்ணனின் மகன் மருத்துவமனையிலிருந்து எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சம்பவம் எதையும் பார்க்கவில்லை என்றாலும் எதிரியை பார்க்கவில்லை என்றாலும் அங்கு நான் போகவே இலலை என்றாலும் இறந்துபோனவர் எனது அண்ணன் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நாங்கள் அனைவரும் திருப்பலிக்கு

சென்றுவிட்டோம் என்றாலும் நாங்கள் யாரும் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் திருப்பலி முடித்து வீட்டிற்கு வந்தபிறகு எனது அண்ணன் இறந்துகிடந்ததை எனது அண்ணி பார்த்தார் என்றாலும் அதன்பிறகு அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றாலும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வீட்டிற்குள் நுழையும்போது எனது அண்ணனின் மகன் ஜெகன் ஜேம்ஸ் எங்கே இருந்தார் என்றால் வீட்டிற்குள் எனது அண்ணனின் அருகே இருந்தார். நான் சொல்வது போல எந்த சத்தத்தையும் நான் கேட்கவும் இல்லை, இறந்த நபரின் வீட்டிற்கு செல்லவும் இல்லை, அப்போது எதிரி அங்கு வரவும் இல்லை என்றால் சரியல்ல. நானும், ஜெகன் ஜேம்ஸூம், எனது அண்ணன் ஜேம்ஸ்ஸை ஆட்டோவில் கொண்டு போனதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.